# DEPOSITION OF WITNESS

---

**MCOP. No.** 629/2022 **DATE:24.02.2026 PW**

**Chief**

Deposition of Witness : P.W.1

Name : Mr.Dharshan

Father/Husband Name : Mr.Lakshmanan

Age :

Address :

Cell Phone No. :

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Act 44 of 1969) of the 24th day of February 2026.

---

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடைய வயது 18. நான் திருப்பெருமந்துூரில் வசிக்கிறேன். மனுவில் பாரா 1 ல் அம்மன் கோயில் தெருவில் வசிப்பதாக சொல்லியுள்ளேன் என்றும் மனுவில் காலம் 16 ஏ ல் பஜனை கோயில் தெரு என்று சொல்லியுள்ளோம் என்றும் எது சரியான விலாசம் என்றால் அம்மன் கோயில் தெரு தான் சரியான விலாசம். விபத்து 23.01.2022 அன்று நடந்தது. அன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 11.40 மணிக்கு விபத்து நடந்தது. என்னுடைய நிரூபண வாக்குமுலம் பாரா 4 ல் விபத்து 23.01.2022 அன்று இரவு 11.40 மணிக்கு நடந்ததாக சொல்லியுள்ளேன் என்பதால் விபத்தே நடக்கவில்லை என்றும் எனவே 2 ம் எதிர் மனுதாரா் காப்பீடு நிறுவனம் இழப்பீடு கொடுக்கக் கடமைப்பட்டவர் இல்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்தின் போது Hyundai காரில் சென்றேன். அதன் பதிவு எண் தெரியாது. சிவப்பு கலர் கார். 5 நபர்கள் பயணம் செய்தோம். நான், என் தம்பி, என் பாட்டி, என் அப்பா அம்மா ஆகியோர் சென்றோம். பாட்டி

NAZIR AHAMED Digitally signed by NAZIR AHAMED

என்னுடைய அம்மாவின் அம்மா. வண்டியை என் அப்பா லஷ்மணன் ஓட்டினார். முன்னாடி மாடு சென்று கொண்டிருந்ததால் அதன்பின்னர் சென்ற கண்டைனர் லாரி டிரைவர் பிரேக் போட்டார். எனவே அதன் பின்னர் வந்த எங்கள் காரும் பிரேக் போட்டோம். அதனால் காரானது கண்டைனர் லாரி பின்னால் இடித்து விட்டது. நிரூபண வாக்குமூலம் பாரா 4 ல் விபத்து எவ்வாறு நடந்தது என்று நாங்கள் சொல்லியுள்ளதிலிருந்து விபத்திற்கு நாங்கள் சென்ற கார் தான் காரணம் என்பது தெரியவருகிறது என்றும் 20 அடி இடைவெளி இல்லாமல் சென்றதால் விபத்திற்கு நாங்கள் சென்ற கார் தான் காரணம் என்றும் எனவே எங்களுக்கு இழப்பீடு கிடைக்காது என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலம் பாரா 7 ல் என் கணவரின் இறப்பிற்கு காரணம் என்றும் மரணம் அடைந்த என் கணவர் என்று சொல்லியுள்ளதால் விபத்தில் இறந்து போனது யார் என்று குழப்பம் என்றால் சரியல்ல. மனுவில் காலம் 10 ல் காரின் பதிவு எண்.டிஎன்51 87 ஏ 3951 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. காலம் 14,23 ல் டிஎன்87 ஏ 3951 என்று உள்ளது. பதிவெண்ணை வேறுபடுத்தி காட்டியுள்ளதால் விபத்து நடக்கவில்லை என்றும் 2ம் எதிர் மனுதாரர் இழப்பீடு கொடுக்க வேண்டியதில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்தில் காரில் சென்ற அனைவருக்கும் அடிபட்டது. என் தாயார் தலையில் அடிபட்டு சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார். மற்றவர்களுக்கு சிறுசிறு காயங்கள் ஏற்பட்டது. என் தாயார் என் தகப்பனாருடன் முன்புற இருக்கையில் அமர்ந்திருந்தார். நாங்கள் பின் இருக்கையில் அமர்ந்திருந்தோம். என் தாயார் சீட் பெல்ட் போடாததால் விபத்தின் போது முன்னால் சென்று தலையில் இடித்து காயம் ஏற்பட்டு இறந்திருக்கிறார் என்றும் சீட்பெல்ட் போட்டிருந்தால் சிறு காயத்துடன் உயிர் பிழைத்திருப்பார் என்றும் இறப்பு நேர்ந்திருக்காது என்றால் சரியல்ல. விபத்திற்குப் பின் போக்குவரத்து

NAZIR AHAMED Digitally signed by NAZIR AHAMED

போலீசார் போன் செய்து ஆம்புலன்ஸ் வரவைத்து எங்களை சவிதா மருத்துவமனையில் சேர்த்தார்கள். பச்சையப்பன் என்பவர் விபத்து குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அவர் என் அப்பாவின் மாமா பையன். நாங்கள் போன் செய்து அவரை வரவைத்தோம். காரானது என் அப்பாவின் மாமாவான முதல் எதிர் மனுதாரருடையது. சவிதா மருத்துவமனையில் என்ன சிகிச்சை எடுத்தோம் என்று நான் பார்க்கவில்லை. என் தாயார் இறந்து போனதால் இராமச்சந்திரா மருத்துவமனைக்கு உடற்கூறாய்வு செய்ய கொண்டு சென்றோம். உடற்கூறாய்வு அறிக்கை தாக்கல் செய்யாததற்கு காரணம் தெரியாது. குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை. எனவே என் தாயார் விபத்தில் இறந்து போனார் என்று சொல்வது தவறு என்றும் எனவே இழப்பீட்டிற்கு கம்பனி பொறுப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்தின் போது காரின் பின்னால் இரண்டு லாரிகள் வந்து மோதியதாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லியுள்ளது சரியல்ல. அந் இரண்டு லாரிகளின் உரிமையாளர்கள், காப்பீடு நிறுவனங்கள் ஆகியவற்றை தரப்பினராக சேர்க்காததால் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. என் தகப்பனார் குடிபழக்கம் இல்லாதவர். அவர் தூக்கக்கலக்கத்தில் விபத்தை ஏற்படுத்தினார் என்று சொன்னால் சரியல்ல. என் அம்மா டைலர் கடை வைத்திருக்கவில்லை வீட்டிலேயே தையல் வேலை செய்து வந்தார். என் தாயார் மாதம் ரூ.20,000/- சம்பாதித்தார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. இரண்டு வாகனங்களையும் மோட்டார் வாகன ஆய்வளார் ஆய்வு செய்தார். முன்னால் சென்ற லாரிக்கு மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை தாக்கல் செய்யவில்லை. எனக்கு சர்க்கரை நோய் உள்ளது. மருந்துகள் அனைத்தும் அரசு மருத்துவமனையில் இலவசமாக வாங்கி உள்ளேன் என்றால் இல்லை

NAZIR AHAMED Digitally signed by NAZIR AHAMED

கடையில் தான் வாங்கி உள்ளேன். அவ்வாறு கடையில் வாங்கியதற்கு பில்கள் தாக்கல் செய்யவில்லை. விபத்திற்கு 20 அடி இடைவெளி இல்லாமல் என் அப்பா காரை ஓட்டி சென்றதாலும் என் தாயார் சீட் பெல்ட் அணியாததாலும் அவர்கள் இருவரது அஜாக்கிரதை தான் விபத்திற்கு காரணம் என்றும் நிரூபண வாக்குமூலத்தில் முன்னால் சென்ற லாரி மாடு மீது மோதாமல் இருப்பதற்காக பிரேக் பிடித்ததாக சொல்லியுள்ளேன் என்றும் எனவே முன்னால் சென்ற லாரி விபத்திற்கு காரணம் இல்லை என்றும் வாகன பதிவு எண் மனுவில் தவறுதலாக சொல்லியுள்ளோம் என்றும் மனுவிலும் நிரூபண வாக்குமுலத்திலும் முரணான எண்கள், நேரம் ஆகியவற்றை சொல்லியுள்ளதாலும் 2ம் எதிர் மனுதாரர் இழப்பீடு கொடுக்கக் கடமைப்பட்டவர் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

X

என்னால் தட்டச்சருக்கு திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவர் சரி என ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

தேதி:24.02.2026.

NAZIR AHAMED Digitally signed by NAZIR AHAMED

தலைமை நீதிபதி,
சிறுவழக்குகள் நீதிமன்றம்.